# ஏப்ரல் - 16- திங்கள்

**நீதிமான்களே, ஆண்டவரில் களிகூருங்கள்: திபா. 33:1**

**முதல் வாசகம் : திருத்தூர் பணி6 : 8 - 15**

அக்காலத்தில் ஸ்தேவான் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பெரும் அருஞ்செயல்களையும் அரும் அடையாளங்களையும் செய்து வந்தார்.அப்பொழுது உரிமையடைந்தோர் எனப்படுவோரின் தொழுகைக்கூடத்தைச் சேர்ந்த சிலரும் சிரேன், அலக்சாந்திரியா நகரினரும் சிலிசியா, ஆசியா மாநிலத்தவரும் ஸ்தேவனோடு வாதாடத் தொடங்கினர்.ஆனால் அவரது ஞானத்தையும் தூய ஆவி வாயிலாக அவர் பேசிய வார்த்தைகளையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலவில்லை.பின்பு அவர்கள், "இவன் மோசேக்கும் கடவுளுக்கும் எதிராகப் பழிச்சொற்கள் சொன்னதை நாங்கள் கேட்டிருக்கிறோம்" என்று கூறச் சிலரைத் தூண்டிவிட்டனர்.அவ்வாறே அவர்கள் மக்களையும் மூப்பர்களையும் மறைநூல் அறிஞர்களையும் அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தார்கள். உடனே அவர்கள் எழுந்து வந்து அவரைப் பிடித்துத் தலைமைச் சங்கத்துக்கு இழுத்துச் சென்றார்கள்மேலும் பொய்ச் சாட்சிகளைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவர்கள், "இந்த மனிதன் இத்தூய இடத்தையும் திருச்சட்டத்தையும் எதிர்த்து ஓயாமல் பேசி வருகிறான்" என்று கூறினார்கள்.மேலும் அவர்கள், "நசரேயராகிய இயேசு இந்த இடத்தை அழித்துவிடுவார் என்றும், மோசே நமக்குக் கொடுத்திருக்கிற முறைமைகளை மாற்றிவிடுவார் என்றும் இவன் கூறக் கேட்டோம்" என்றார்கள்.தலைமைச் சங்கத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அவரை உற்றுப் பார்த்தபோது அவரது முகம் வானதூதரின் முகம்போல் இருக்கக் கண்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.

**நற்செய்தி : யோவான் 6 : 22 – 29**

இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த பின் சீடர்கள் புறப்பட்ட கரையிலேயே மறுநாளும் மக்கள் கூட்டமாய் நின்று கொண்டிருந்தார்கள். முந்தின நாள் ஒரு படகைத்தவிர வேறு படகு எதுவும் அங்கு இல்லை என்பதையும் அதில் இயேசுவின் சீடர்கள் மட்டும் போனார்களே அன்றி இயேசு அவர்களோடு அப்படகில் ஏறவில்லை என்பதையும் அவர்கள் கண்கூடாகப் பார்த்திருந்தார்கள்.அப்போது, ஆண்டவர் கடவுளுக்கு நன்றி செலுத்திக் கொடுத்த உணவை மக்கள் உண்ட இடத்திற்கு அருகில் திபேரியாவிலிருந்து படகுகள் வந்து சேர்ந்தன.இயேசுவும் அவருடைய சீடரும் அங்கு இல்லை என்பதைக் கண்ட மக்கள் கூட்டமாய் அப்படகுகளில் ஏறி இயேசுவைத் தேடிக் கப்பர்நாகுமுக்குச் சென்றனர்.அங்கு கடற்கரையில் அவர்கள் அவரைக் கண்டு, "ரபி, எப்போது இங்கு வந்தீர்?" என்ற கேட்டார்கள்.இயேசு மறுமொழியாக, "நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக, அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத் தேடுகிறீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிடமகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் தந்தையாகிய கடவுள் அவருக்கே தம் அதிகாரத்தை அளித்துள்ளார்" என்றார்.அவர்கள் அவரை நோக்கி, "எங்கள் செயல்கள் கடவுளுக்கு ஏற்றவையாக இருப்பதற்கு நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, "கடவுள் அனுப்பியவரை நம்பவதே கடவுளுக்கேற்ற செயல்" என்றார்.

**தியானம்:** பேசாத மடந்தைகளாகவும், தாம் இயேசுவின் சீடர்களென்று கூறுவதற்கு கூட அஞ்சியவர்களாக மக்கள் முன் நடமாடவே பயந்தொழிந்த அப்போஸ்தலாகள், தூய ஆவியின் வருகையின் பின் புதுப்பிறப்புக்களாக மாற்றமடைந்து வீரத்துடன் யேசுவுக்கு சாட்சியாக விளங்குவதை இன்றைய முதல் வாசகத்தில் காண்கின்றோம். உலகம் பாவமாகிய காரிருளினால் மூழ்கிக் கிடக்கின்றது. மக்கள் பாவம் செய்கின்றோம் என்கின்ற உணர்வே இல்லாது மனம்போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இறைவனுடைய வார்த்தையைக் கேட்டிருந்தும் அவர் செய்த புதுமைகளைக் கண்டிருந்தும் சீடர்களில் சிலர் அவர்களைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதை இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாம் காண்கின்றோம். காற்றையும், கடலையும் அமரச் செய்த வார்த்தை, பிணியாளர்களைக் குணப்படுத்திய வார்த்தை, இறந்தவர்களை உயிர்ப்பித்த வார்த்தையை நாம் விசுவசிப்போமேயானால் எமக்கும் நிலைவாழ்வு கிடைக்கும் என்பதனை சீமோன் பேதுரு எடுத்துரைப்பதை காண்கின்றோம். கடவுள் மனிதனாகி மனிதர்கள் மத்தியில் வாழ்ந்த போது பலர் அவரைப் புரிந்துகொள்ளவில்லை. அவர் வேதனைப்படும் பொழுது பக்கபலமாக இருந்தவர் ஒருசிலரே. எம்முடைய நடைமுறை வாழ்க்கையிலும் கண்ணிருந்தும் குருடர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதிசயங்கள், ஆர்ப்பரிப்புக்களை கண்டு நாம் அலைந்து திரியாமல் நிலை வாழ்வளிக்கும் வார்த்தைகளின்படி நடக்க இறைவனிடம் வலம் வேண்டுவோம்